**01.08.2023**
**OS 205/22**
**வா.சா.1பிரபாகரன்**
**குறுக்கு விசாரணை :-**

நான் டிப்ளமோ வரை படித்துள்ளேன். தாவா சொத்து 5-1/2 செண்ட். ரோட்டுடன் சேர்த்து என்று சொல்கிறார். பிரதிவாதி-வசுமதி அவரது கணவர் மருதசுரேஷ் மூலமாக பழக்கம். பிரதிவாதி தாவா சொத்தை எவ்வளவுக்கு கிரையம் வாங்கினார் என்று எனக்குத் தெரியாது. பிரதிவாதியின் பெயரில் உள்ள அசல் கிரைய பத்திரத்தை வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளேன். எனக்கும், எனது மனைவிக்கும் யூனியன் பேங்க் ஆப் இந்தியா, கே.புதூர் கிளையில் ஜாயிண்ட் அக்கவுண்ட் உள்ளது என்றால் சரிதான். 08.03.2019ம் தேதி ரூ.4லட்சத்தை பத்திர அலுவலகத்தில் வைத்து மருதசுரேஷ் மற்றும் அவரது மனைவி வசுமதி முன்னிலையில் கொடுத்தேன். அதில் ரூ.2 லட்சத்தை ரொக்கமாவும், ரூ.2லட்சத்தை காசோலையாகவும் கொடுத்தேன். ரொக்கமாக பணம் கொடுத்ததற்கு மருதசுரேஷ் மற்றும் அவரது மனைவி வசுமதியை தவிர வேறு எந்த சாட்சியும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 கிரைய ஒப்பந்தப்படி கிரையத்தை நிறைவேற்ற ஒரு வருட கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த ஒருவருட காலத்தில் கிரையத்தை நிறைவேற்றக்கோரி நான் எவ்வித சட்ட அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரிதான், நான் நேரில் கேட்டேன். அவ்வாறு நான் பிரதிவாதியை நேரில் சந்தித்து அந்த ஒருவருட காலத்தில் கிரையத்தை நிறைவேற்றக்கோரி கேட்டதாக என்னுடைய வழக்குரையிலோ, பிரமாண பத்திரத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். அவ்வாறு கேட்டதாக என்னுடைய வழக்குரையிலோ, பிரமாண பத்திரத்திலோ தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மீதி கிரையத் தொகை ரூ.3,03,500/-ஐ நான் செலுத்த தயாராக உள்ளதாக நான் என்னுடைய வழக்குரையிலோ, பிரமாண பத்திரத்திலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பில் மீதி கிரையத் தொகை ரூ.3,03,500/-ஐ நான் செலுத்த தயாராக உள்ளதாக சொல்லவில்லை. சாட்சி தொகையை குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொல்கிறார். எனக்கு யூனியன் பேங்க் ஆப் இந்தியா, கே.புதூர் கிளையில் தனி வங்கி கணக்கு உள்ளது என்று சொன்னால் அது over draft கணக்காகும். நான் கட்டிட தொழில் செய்து வருகிறேன். மருதசுரேஷ்க்கு ரூ.2 லட்சம் நான் கடனாக கொடுத்தேன் என்றும், அதற்காகத்தான் வா.சா.ஆ.2 கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்டது என்றால் இல்லை. நான் கிரையம் செய்ய வேண்டும்

என்ற எண்ணத்தில்தான் பணம் கொடுத்தேன். இதை தவிர நான் மருதசுரேஷ்க்கு நான் கடனாக பணம் ஏதும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை, கைமாற்றாக பணம் கேட்பார், நான் கொடுத்துவிட்டு, அதை அவர் திரும்ப செலுத்திவிடுவார். வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவண காலகட்டமான 2019-2020ல் அவ்வாறு எத்தனை முறை பணம் கைமாற்றாக கேட்டு அதை செலுத்தியுள்ளார் என்றால் சரியாக ஞாபகமில்லை, சுமார் 7, 8 முறை இருக்கும். பிரதிவாதியின் கணவர் ரூ.2லட்சம் என்னிடம் பெற்றதற்காக அவர் மாதாமாதம் என்னுடைய வங்கி கணக்கில் வட்டி தொகையை செலுத்தி வந்துள்ளார் என்பதை நான் மறுக்கிறேன். ஒரு கிரைய ஒப்பந்த பத்திரம் போடும்போது அசல் மூல பத்திரங்களை கிரையம் செய்யும்போதுதான் ஒப்படைப்பார்கள் என்றால் சரிதான். சாட்சி பின்னிட்டு பிரதிவாதி முதல் ஒப்பந்த பத்திரத்திற்கு அசல் மூலபத்திரங்களை ஒப்படைக்கவில்லை என்றும், இரண்டாவது கிரைய ஒப்பந்த பத்திரத்திற்கு காலதாமதமாவதாக நான் சொன்னதால்தான் பிரதிவாதி அசல் மூலபத்திரங்களை என்னிடம் ஒப்படைத்தார் என்று சொல்கிறார். அசல் மூல பத்திரங்களை பிரதிவாதி கடன் கொடுக்கும்போதே நான் வாங்கி வைத்துக்கொண்டேன் என்றும், தற்போது வழக்கிற்காக என்னிடம் இரண்டாவது கிரைய ஒப்பந்த பத்திரத்திற்கு ஒப்படைத்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை நான் நேரடியாக சென்று பார்த்துள்ளேன். அதன் சந்தை மதிப்பு எவ்வளவு போகிறது என்று எனக்குத் தெரியாது. நான் அரசு வழிகாட்டு மதிப்பிற்குதான் கிரைய ஒப்பந்த பத்திரம் போட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 கிரைய ஒப்பந்த பத்திரத்திற்கு ஒரு வருட கால அவகாசம் எதற்காக போடப்படுகிறது என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.3 கிரைய ஒப்பந்த பத்திரத்திலும் ஒரு வருட கால அவகாசம் போடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 கிரைய ஒப்பந்த பத்திரத்திற்கு ஒரு வருட கால அவகாசம் எதற்காக போடப்படுகிறது என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.3 கிரைய ஒப்பந்த பத்திரத்திலும் நான் கிரைய ஒப்பந்தத்தை நிறைவேற்ற தயாராக இருப்பதாகவும், பிரதிவாதி காலதாமதம் செய்து வருதாக எவ்வித விவரங்களும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் வழக்கறிஞர் அறிவிப்பை இரண்டாவது கிரைய ஒப்பந்த பத்திரம் போட்டு அதன் ஒரு வருட கால அவகாசம் முடிந்த பின்னிட்டுதான் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதியும், பிரதிவாதியின் மனைவியும் என்னுடைய ஜாயிண்ட் அக்கவுண்டிற்கும், என்னுடைய தனிப்பட்ட ஓடி அக்கவுண்டிற்கும் மாதாமாதம் அவர்கள் பெற்ற கடன் வட்டித்தொகையை செலுத்தி

வந்தார்கள் என்றால் சரியல்ல. அதை எனது வங்கி கணக்கை பார்த்தால் தெரியவரும் என்றால் சாட்சி பிரதிவாதியின் கணவர் தன்னிடம் கைமாற்றாக வாங்கிய பணத்தை தன்னுடைய கணக்கில்தான் செலுத்தியதாக சொல்கிறார். என்னுடைய வங்கி கணக்கு விவரத்தை 2019-2021 கால கட்டத்திற்கு கொடுக்க தயாராக உள்ளேன். என்னுடைய தொழிலே வட்டிக்கு பணம் கொடுப்பது என்றும், நான் அதை மறைத்து கட்டிடம் கட்டும் தொழில் செய்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 சட்ட அறிவிப்பை நான் அனுப்பவில்லை என்றும், நான் பிரதிவாதியிடம் ஒரு கவர் வீட்டிற்கு வரும் என்றும், அந்த கவரை என்னிடம் கொடுத்தால்தான் மேற்கொண்டு வட்டித் தொகை வாங்க இயலும் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அதைபோல பிரதிவாதி ரூ.2லட்சம்தான் கடன் பெற்றார் என்றும், அதற்கு ரூ.4லட்சத்திற்கு நான் கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொள்வதாகவும், எப்போது அசல் வட்டி தொகையை செலுத்திவிட்டால் ரத்து செய்து விடுவதாகவும் உறுதியளித்தேன் என்றும், எனவே மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரமானது பிரதிவாதி கொடுத்த கடனுக்கு ஆதரவாக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. நான் கிரைய ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் கிரைய ஒப்பந்தம் போட்டிருந்தால் வா.சா.ஆ.2 கிரைய ஒப்பந்த பத்திரத்தின் அடிப்படையிலேயே வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றும், கடனிற்காகத்தான் கொடுத்ததால்தான் வா.சா.ஆ.3 ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி வட்டிக்கு கடன் வாங்கினாரா இல்லையா என்பது என் மனைவியை விசாரித்தால் தெரிய வரும் என்றால் என் மனைவிக்கு இது பற்றி எதுவும் தெரியாது. கிரையம் வாங்குவதற்கு பணம் கொடுத்துள்ள விவரம் மட்டும்தான் தெரியும். கிரைய ஒப்பந்த பத்திரம் போடும்போது பணம் கொடுக்கும்போது என் மனைவி வரவில்லை. தாவா சொத்து மதுரை மாவட்ட நீதிமன்றத்தின் உத்தரவுப்படி பற்றுகை செய்யப்பட்டுள்ளது என்றால் அதை பற்றிய விவரம் எனக்குத் தெரியாது. மாவட்ட நீதிமன்றத்தில் சீனிவாசன் என்பவர் வழக்கு போட்டுள்ள விவரம் எனக்குத் தெரியாது. மருதசுரேஷ் குடும்பத்தார் கடன் தொகை அதிகமாகிவிட்டதால் அவர் நொடிப்பு நிலையர் என அறிவிக்ககோரி மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. கொரோனா காலகட்டத்திற்கு முன்பு வரை பிரதிவாதி மற்றும் அவரது கணவர் ஒழுங்காக என்னிடம் வாங்கிய கடனிற்கு வட்டி செலுத்தி வந்தார் என்றும், கொரோன காலகட்டத்திற்கு பின்னிட்டு பிரதிவாதி மற்றும் அவரது கணவரால் ஒழுங்காக வட்டி செலுத்த இயலாத காரணத்தினால் நான் கடனிற்கு ஆதரவாக பெற்ற வா.சா.ஆ.2 மற்றும் 3 கிரைய

ஒப்பந்த பத்திரங்களின் அடிப்படையில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் ஒரு செண்ட் மதிப்பு ஏறத்தாழ ரூ.7 லட்சம் மதிப்பு போகிறது என்றும் எனவே வழக்கு சொத்தின் மொத்த மதிப்பு ரூ.40 லட்சத்திற்கு மேல் வரும் என்றால் எனக்குத் தெரியாது. ஒரு சொத்தை கிரையம் வாங்கும்போது சந்தை மதிப்பைதான் பேசுவார்கள் என்றும், அரசு மதிப்பிற்கு பேசமாட்டார்கள் என்றும், அதனால் நான் வழக்கு சொத்தை கிரையம் வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் கிரைய ஒப்பந்தம் போடவில்லை என்றும், நான் கடன் கொடுத்த தொகைக்கு ஆதரவாக கிரைய ஒப்பந்த பத்திரமாக எழுதிக்கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 கிரைய ஒப்பநத பத்திரத்தின்போது மருதசுரேசும், ராமசந்திரனும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். ராமசந்திரனை விசாரித்தால் வட்டிக்கு பணம் கொடுத்து கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்டதா அல்லது கிரையம் பதிவதற்காக ஏற்படுத்தப்பட்டதா இல்லையா என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரிதான். ராமசந்திரன் என்னுடைய உறவினர் என்றால் இல்லை, எனக்கு தெரிந்தவர். வா.சா.ஆ.3 கிரைய ஒப்பந்த பத்திரத்தின்போது மருதசுரேசும், ராமசந்திரனும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். ராமசந்திரன் பரமகுடியிலிருந்து அழைத்து வந்து கையெழுத்து போட வைத்துள்ளேன் என்றால் அவரது சொந்த ஊர் பரமகுடி, அவர் மதுரையில்தான் இருக்கிறார். 2019ற்கு முன்பு கிரைய ஒப்பந்தம் போடுவதற்கு வில்லங்கம் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அவ்வாறு வில்லங்கம் பார்த்துதான் கிரைய ஒப்பந்தம் பதிந்ததாக என்னுடைய வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. 2019 கிரைய ஒப்பந்த பத்திரத்திற்கு போட்ட வில்லங்க சான்றிதழை நான் நீதிமன்றத்தில் கொடுக்கவில்லை. வா.சா.ஆ.2 மற்றும் 3 கிரைய ஒப்பந்த பத்திரங்கள் சொத்தை வாங்குவதற்காக போடப்படாததால் நான் சொத்தை குறித்த வில்லங்கம் எதுவும் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. அதற்கு முன்பாக போடப்பட்ட வில்லங்க சான்றுகள் என்னிடம் உள்ளதா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. நான் வில்லங்க சான்றுகள் அவ்வாறு எதுவும் போடவில்லை என்றும், வழக்கிற்காக போட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து அதிக சந்தை மதிப்பு பெறும் என்பதால் தாவா சொத்தை அபகரிக்க நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 கிரைய ஒப்பந்த பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள முன்பண தொகை 80 சதவீதத்திற்கு மேல் முழு கிரையத் தொகையில் உள்ள நிலையில் ஒரு வருட கால அவகாசம் ஒப்பந்தத்தை நிறைவேற்ற எவ்வித விளக்கமும் சொல்லப்படாத நிலையில்

ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் குடும்ப சூழ்நிலைக்காக அவ்வாறு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பிரதிவாதியும், அவரது கணவரும் மதுரை, மகாலெட்சுமி நகரில் உள்ளார்கள். அதனால் பத்திர பதிவு செய்வதற்கு கால தாமதம் செய்ய வேண்டிய அவசியமில்லை என்றும், மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரங்கள் கடனிற்காக ஏற்படுத்தப்பட்டவை என்பதால் மேற்படி ஒரு வருட கால அவகாசம் போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வட்டிக்கு கடன் கொடுத்ததால்தான் நான் கொடுத்த பணத்தை திருப்பி கேட்டு மாற்று பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி மாற்று பரிகாரத்தில் கோரியுள்ள தொகையை நீதிமன்றத்தில் செலுத்த தயாராக உள்ள நிலையில் நான் கோரியுள்ள ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் ரூ.4 லட்சம் கடனாக கொடுத்துவிட்டு கிரைய ஒப்பந்த பத்திரங்கள் ஏற்படுத்தி கொண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி மேற்படி ரூ.4லட்சத்தை திரும்ப கொடுக்க தயாராக உள்ள நிலையில் அதை பெற்றுக்கொள்ள தயாராக உள்ளேனா என்றால் எனக்கு நிலம்தான் வேண்டும்.

ஒம்:-S.கணேசன்
சார்பு நீதிபதி,
மேலூர்.